வரையறுத்த எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ரூபா 4,410,836 தொகையான வட்டி வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கல்களின் கீழ் பதியப்பட்டிருந்தும் காசாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,357,912 தொகையான வட்டி வருமானம் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக பதியப்பட்டிருக்காததனால் முதலீட்டு நடவடிக்கைகளின் காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பிற்போட்ட வருமானங்களிலிருந்து பதிவழிக்கப்பட்ட ரூபா 916,978 பெறுமதியானது காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது காசு அற்ற விடயமாக இலாபத்திலிருந்து கழிப்பதற்குப் பதிலாக இலாபத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் ரூபா 1,833,956 தொகையால் அதிகரித்து பதியப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து வரிகளின் தற்காலிக மாற்றங்களுக்காக பிற்போட்ட வரிப் பொறுப்பு இனங்காணப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வாளரின் கணிப்பீடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ரூபா 34,339,662 தொகையான பிற்போட்ட வரிப்பொறுப்பு இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 1995 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 5,000,000 பெறுமதியான தொகுதிக் கடன்களுக்காக 2000 யூன் 15 ஆந் திகதியிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய ரூபா 12,600,000 வட்டிச் செலவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய பயிர்களின் முதிர்ச்சியடையும் காலமானது துறையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளின் பிரகாரம் 02 ஆண்டுகளிலிருந்து 06 ஆண்டுகள் வரையான வீச்சில் காணப்பட்டிருந்தும் கம்பனிக்கு உரிய பயிர்களின் முதிர்ச்சியடையும் காலத்தை இனங்காண்பதற்கு உறுதியான கொள்கை கம்பனியிடம் இல்லாமையால் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ஆரம்பிக்கப்பட்ட பயிர்செய்கைகளுக்காக மூலதனமாக்கப்பட்ட ரூபா 149,745,255 கிரயமானது முதிர்ச்சியடைந்த பயிர்களாக இனங்காணப்பட்டு அதற்காக காலக்கழிவு செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பலாப் பயிர்களை மரங்களாக எடுத்துக் கொள்வதற்காக சட்டரீதியான தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமையின் காரணமாக பொதுப் பயன்படுத்தப்படுகின்ற உயிரியல் சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் போது பலாப்பயிர்களின் பெறுமதியானது தொழில்சார் மதிப்பீட்டாளர்களால் பொதுப் பயன்படுத்தப்படுகின்ற உயிரியல் சொத்துக்களாக இனங்காணப்படாதிருந்த போதிலும் கம்பனியால் பலா மரங்களின் பெறுமதியாக ரூபா 115,109,263 தொகை உள்ளடக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற உயிரியல் சொத்துக்களின் பெறுமதி ரூபா 311,900,488 ஆக மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(எ) 1993 ஆம் ஆண்டில் கம்பனியைத் தோற்றுவிக்கும் போது இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 87,740,383 தொகையான முதிர்ச்சியடையாத விளைச்சல் தருகின்ற உயிரியல் சொத்துக்களுக்குரிய தகவல்கள் கம்பனியிடம் இல்லாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையும் அச்சொத்துக்கள் முதிர்ச்சியடையாத பயிர்களின் கீழ் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கம்பனியால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களாக ரூபா 2,954,419 மாத்திரம் காட்டப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் தலைமை அலுவலகத்திற்கும் தோட்டங்களுக்கும் இடையே இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யும் போது தீர்த்து வைக்கப்படாது காணப்பட்ட ரூபா 14,691,639 வரவுப் பெறுமதியும் அதில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களாக ரூபா 11,737,219 வரவு மீதி காட்டப்பட்டிருந்தது.

(ஐ) கம்பனியின் 05 தோட்டங்களால் 2001 ஆம் ஆண்டிற்கும் 2008 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட தேயிலை நாற்று மேடைகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பௌதீகரீதியாக இல்லாதிருந்த போதிலும் அதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 2,062,559 கிரயமானது மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட இருப்பில் உள்ளடக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனி தயாரித்த நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்தும் இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் கிடைக்க வேண்டியதாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி முறையே ரூபா 1,185,670 மற்றும் ரூபா 1,768,749 ஆக இருந்த போதிலும் உரிய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி முறையே ரூபா 8,723,922 மற்றும் ரூபா 1,743,955 ஆக இருந்ததன் காரணமாக உரிய பெறுமதிகளுக்கிடையே முறையே ரூபா 7,538,252 மற்றும் ரூபா 24,794 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஓ) கம்பனியினால் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து 2010 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 20,000,000 ஆன தொடக்க கடன் பணம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 22,750,674 ஆக நிதிக் கூற்றக்களில் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 2,750,674 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஔ) ரூபா 96,476,872 கிரயமான ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றின் பெறுமதியை உறுதிப்படுத்திக்கொள்வதற்குத் தேவையான நிலையான சொத்துக்கள் பதிவேடு வாகனங்களுக்கான வாகனப் பதிவுச் சான்றிதழ் முதலிய ஆவணங்கள் கம்பனியினால் பேணப்பட்டிருக்கவில்லை.

(க) முறையே ரூபா 72,586,179 மற்றும் ரூபா 1,831,975 பெறுமதிகளான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ஐயக் கடனுக்கான ஒதுக்கீட்டு மீதி ரூபா 4,186,615 ஆக இருந்த போதிலும் அப் பெறுமதியை கணிப்பதற்கு பயன்படுத்திய கடன்பட்டோர் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) வணிக மற்றும் ஏனைய பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் கீழ் பதியப்பட்டிருந்த ரூபா 3,777,650 பெறுமதியான 10 கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக் கூற்றுக்ககள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்திகளில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது. அதன் காரணமாக இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

#### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் கட்டளையிடப்பட்டவாறு பின்வரும் விடயங்களைத் தருகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் நோக்கெல்லையும் மற்றும் மட்டுப்படுத்தல்களும் மேலே தரப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயமானது.

- கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுவும் எனது பரிசோதனைகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்டவாறு கம்பனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்பதுவும்.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளன என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 15 மற்றும் 16 ஆம் பிரிவுகள் | சேவை வழங்குனர்களால் ஊழியர்களுக்குரிய பங்களிப்பு பணத்தை அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தை செலுத்த வேண்டிய போதிலும் கம்பனி உரிய திகதிக்கு முன்னர் பங்களிப்பு பணத்தை செலுத்தாமையின் காரணமாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 4,331,277 தொகையை மிகைக் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருந்தது. |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் I ஆம் பந்தி | ஒரு ஊழியர் சேவையை விட்டு நீங்கி அல்லது இளைப்பாறி ஒரு மாதத்திற்குள் பணிக்கொடைப் பணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 1995 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை சேவையிலிருந்து விலகிய 1093 ஊழியர்களுக்கு செலுத்தப்படாத ரூபா 103,300,180 மொத்த தொகையான பணிக்கொடைப் பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | (i) செயல் நிமித்த உப கட்டுநிதியானது செயற்பட்டு பூர்த்தியடைந்த உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 14 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,283,048 பெறுமதியான முற்பணங்கள் உரிய செயற்பாடுகள் பூர்த்தியடைந்து ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அப்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஒரு தடவையின் போது ரூபா 100,000 உச்ச அளவு வரையான செயல் நிமித்த உப கட்டு நிதி வழங்கக் கூடியதாக இருந்த போதிலும் இரண்டு பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையை மிகைத்து 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 152,000 இலிருந்து ரூபா 304,000 வரையான வீச்சுடைய முற்பணங்கள் கம்பனியால் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | அங்கீகரிக்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகளுக்கு உட்படாத சம்பளங்களையும் படிகளையும் செலுத்துவதற்கு முன்னர் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் |

| | | |
|---|---|---|
| | | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் உரிய அங்கீகாரமின்றி கம்பனியின் தலைவர் மற்றும் பதில் பொது முகாமையாளருக்கு ரூபா 1,045,930 பணம் "வேலையாள் படியாகச்" செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றிக்கை | கம்பனியின் தலைவருக்கு மாதாந்தம் பெறத் தகமையுள்ள எரிபொருள் படி 170 லீற்றராக உள்ளதுடன் அந்த எல்லையை மிகைக்கும் போது உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி அங்கீகரித்த எரிபொருள் எல்லையினை மிகைத்து 4,719 லீற்றர்களுக்காக ரூபா 519,090 பணம் மீளாய்வாண்டின் போது கம்பனியால் செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | ஒரு வாகனத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் மாத்திரம் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனவும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை வாடகைக்கு வழங்கும் நிறுவனங்களிடமிருந்து குத்தகை முறைமையின் கீழ் வாகனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் கம்பனியின் தலைவரின் பாவனைக்காக திறைசேரியின் அங்கீகாரமின்றி 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதியிலிருந்து 2017 ஒக்தோபர் 19 ஆந் தகிதி வரையான ஒரு ஆண்டிற்காக ஒரு தனிப்பட்ட வாகனம் மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 37,088,435 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 62,756,178 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 99,844,613 முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 66,918,564 ஆல் அதிகரித்தல் மற்றும் பிரதான பயிர்களின் பயிர்செய்கையிலிருந்து அடைந்த நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 30,126,909 ஆல் குறைவடைதல் நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் தரவுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான இலங்கையில் தேயிலையின் ஒரு ஹெக்டயருக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த பூர்த்தியான தேயிலை விளைச்சல் 1595 கிலோகிராம்களாக இருந்த போதிலும் கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்ற 6 தோட்டங்களில் வருடாந்த தேயிலை விளைச்சல் 390 கிலோ கிராம்களுக்கும் 876

கிலோ கிராம்களுக்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. இதற்காக கம்பனியால் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான 447 ஹெக்டயர்களிலான விதைத் தேயிலைப் பயிர்செய்கையைப் பராமரித்தல் மற்றும் அதிக விளைச்சலுடைய தண்டுத் தேயிலைப் பயிர்செய்கையில் தொடர்ச்சியாக ஈடுபடாமை குறைந்த விளைச்சலைப் பெறுவதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) கம்பனியின் தேயிலைப் பயிர் செய்கை காணப்படுகின்ற 6 தோட்டங்களில் ஒரு கிலோ கிராம் தேயிலைக் கொழுந்தின் பங்களிப்பானது 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான மறைப் பெறுமதியானது ரூபா 13 இற்கும் ரூபா 70 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(இ) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் தரவுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது ஒரு ஹெக்டெயருக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த பூர்த்தியான தேயிலை விளைச்சல் 1,595 கிலோ கிராம்களாக இருந்த போதிலும் கம்பனியின் வெளிவாரி தோட்டக்காரர்களால் நிர்வகிக்கப்படுகின்ற 334 ஹெக்டெயர்களில் ஒரு ஹெக்டெயரின் பூர்த்தியான தேயிலை விளைச்சல் 06 கிலோ கிராம்களுக்கும் 89 கிலோ கிராம்களுக்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அதற்கிணங்க வெளித்தரப்பினர்களால் நிர்வகிக்கப்படுகின்ற தேயிலைப் பயிர்செய்கைக் காணிகளின் அளவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ஆர்.எஸ்.எஸ் 1 வகையான ஒரு கிலோ கிராம் இறப்பரின் சராசரி விலை ரூபா 337 ஆக இருந்த போதிலும் கம்பனியால் விற்கப்பட்ட ஒரு கிலோ கிராம் இறப்பர் இற்கு தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலை ரூபா 304 இற்கும் ரூபா 278 இற்றும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(உ) கம்பனியின் 4 தோட்டங்களில் காணப்பட்ட 292 ஹெக்டெயர்களிலான தென்னைப் பயிர் செய்கையின் மூலம் மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட தேங்காய் விளைச்சலானது 841,964 தேங்காய்களாக இருந்ததுடன் அந்த அளவை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 38 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இதற்காக நீர்ப்பாசன முறைமை போதியளவில் அமுல்ப்படுத்தப்படாமை, ஒட்டு மொத்த தென்னைப் பயிர்ச்செய்கையிலிருந்து 64 சதவீதமான விளைச்சலானது ஆயுட்காலத்தை மிகைத்த பயிர்களாக இருந்தமை. மீளப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்தற்குத் தாமதித்தல் என்பன விளைச்சல் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது.

(ஊ) மில்லவான தோட்டத்தில் அமைந்துள்ள 45.77 ஹெக்டெயர் மற்றும் ஹபுஸ்பிடிய தோட்டத்தின் கொக்கோ பயிர்ச்செய்கையின் மூலம் மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் 17,000 கிலோ கிராம்களாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான விளைச்சல் 2305 கிலோ கிராம் அதாவது மதிப்பீடு செய்யப்பட்ட அளவில் 14 சதவீத விளைச்சல் மாத்திரமாகும். ஒரு கொக்கோ மரத்தின் விளைச்சல் தரும் ஆயுட் காலம் 25-30 ஆண்டுகளாக இருந்த போதிலும் இப் பயிர்ச்செய்கையிலிருந்து அதிகளவான விளைச்சலானது ஆயுட்காலத்தை மிகைத்த பயிர்களாக இருத்தல், கிளைகளை வெட்டுதல், நீர் ஊற்றுதல், பசளை போடுதல் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாமையின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது விளைச்சல் 30 சதவீதத்தால் குறைவடைந்திருந்துத

## 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1993 ஆம் ஆண்டில் கம்பனியைத் தோற்றுவிக்கும் போது 4704 ஹெக்டெயர் அளவான காணி வர்த்தமானியின் மூலம் கம்பனிக்கு கிடைத்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் காணிகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் 4054 ஹெக்டெயர்கள் மாத்திரம் கம்பனியினால் நிர்வகிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. எஞ்சியுள்ள 650 ஹெக்டெயர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் தோட்டங்களால் தற்பொழுது நிர்வகிக்கப்படுகின்ற 4054 ஹெக்டயர் காணிகளில் 2624 ஹெக்டயர்களில் மாத்திரம் பயிர்ச்செய்கை நடவடிககை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் எஞ்சியுள்ள 1430 ஹெக்டெயர் காணிகளை பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான மாத்தளையில் காணப்படுகின்ற தோட்டத்துக்கு அண்மையில் 2003 ஆம் ஆணடின் போது நிர்மாணிக்கப்பட்ட ஒரு கட்டிடத்திற்கு கொழும்பில் அமைந்துள்ள கம்பனியின் தலைமை அலுவலகத்தைக் கொண்டு வருவதற்கு பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவால் வழங்கப்பட்ட சிபார்சுகள் மீளாய்வாண்டின் இறுதி வரை அமுல்ப்படுத்தப்படாதிருந்ததுடன் உரிய கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) நிதி ஒழுங்கீனத்தின் அடிப்படையில் வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட தோட்ட அத்தியட்சகர் தொடர்பாக தொழில் ஆணையாளரின் முன்னிலையில் கம்பனிக்கும் உரிய உத்தியோகத்தருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட எழுத்து மூல இணக்கப்பாட்டின் பிரகாரம் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்குரிய நிலுவைச் சம்பளம் மற்றும் படிகளின்றி மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் அரசியல் பழிவாங்கலுக்கான இழப்பீட்டுக்கொடுப்பனவின் கீழ் சேவை இடை நிறுத்தலுக்கு உள்ளாகிய காலம் தொடர்பான சம்பளங்களும் படிகளுமாக ரூபா 2,694,669 தொகையினை செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு ரூபா 1,600,000 பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகளின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது 15 முறைப்பாடுகளில் 14 முறைப்பாடுகளுக்கு குற்றவாளியாக இருந்த ஒரு தோட்ட அதிகாரி 2013 ஆம் ஆண்டின் போது சேவையிலிருந்து இடை நிறத்துவதற்கு உட்பட்டிருந்தும் உரிய ஒழுக்காற்று அதிகாரிகளால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாது நிலுவைச் சம்பளம் மற்றும் படிகளுடன் 2013 செப்தெம்பர் 27 ஆந் திகதி மீண்டும் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். அரசியல் பழிவாங்கலுக்காக இழப்பீட்டுக் கொடுப்பனவின் கீழ் சேவையிலிலிருந்து இடை நிறுத்தலுக்கு உட்பட்ட காலத்திற்குரிய சம்பளமும் படிகளுமாக ரூபா 1,304,119 இனைச் செலுத்தவதற்குத் தீர்மாணிக்கப்பட்டு ரூபா 785,000 பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) எல்கடுவ தோட்டத்திற்குச் சொந்தமான ரன்வத்த தோட்டத்தில் அமைந்துள்ள பளிங்குகல் சுரங்கத்தை 05 ஆண்டுகள் காலத்திற்கு தோண்டி எடுப்பதற்காக ஒரு கியூப் கல்லினை பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரியினை உள்ளடக்கி ரூபா 13,650 இற்கு கொள்வனவு செய்வதற்கு இணங்கியிருந்தும் 2018

சனவரியிலிருந்து யூன் 14 வரை அகற்றிய 164.47 கியூப் கல்லில் 59.85 கியூப் கல்லுக்கு மாத்திரம் ரூபா 13,650 வீதம் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சியுள்ள 104.62 கியூப் சேதமடைந்த பளிங்கு கல்லாக (waste Quarts) இனங்காணப்பட்டு ஒரு கியூப் ரூபா 13,650 இற்கு கொள்வனவு செய்வதற்குப் பதிலாக ரூபா 1,000 வீதம் செலுத்தி குத்தகைதாரரால் அகற்றப்பட்டிருந்தது.

(உ) கம்பனிக்குச் சொந்தமான 358 ஹெக்டயர் காணிகள் கொண்ட நெலஉள்ள தோட்டத்தில் 233 ஹெக்டயர் அளவானவை 255 அத்துமீறிக் குடியிருப்பாளர்களால் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் இந்த அத்துமீறிக் குடியிருப்பாளர்களை அகற்றி உரிய காணியை மீளப் பொறுப்பேற்பதற்கு அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கம்பனிக்குச் சொந்தமான பண்டாரபொல தேயிலைத் தொழிற்சாலை 2006 ஆம் ஆண்டில் ஒரு தனியார் கம்பனிக்கு 30 ஆண்டுகள் காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகைகாரரால் குத்தகைப் பணத்தை செலுத்தாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட ரூபா 27,028,579 நிலுவை குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கம்பனிக்குச் சொந்தமாக 05 தொழிற்சாலைகளில் 02 தொழிற்சாலைகள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் உரிய தொழிற்சாலைகளின் மூலம் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு பதவிப் பெயரின் கீழ் ஒரு உத்தியோகத்தருக்கான வெற்றிடம் காணப்பட்டதுடன் ஒரு பதவிப் பெயரின் கீழ் ஒரு உத்தியோகத்தருக்கான மிகை காணப்பட்டது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத மூன்று உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்ட பொது முகாமையாளர் பதவிக்காக அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க பொது முகாமையாளர் ஒருவர் நிரந்தரமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து நியமிக்கப்படாததுடன் ஒப்பந்த மற்றும் பதில் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) அங்கீகரித்த பதவியணிக்கு இணங்க 01 பிரதிப் பொது முகாமையாளர் பதவி காணப்பட்ட போதிலும் அப்பதவிக்காக 03 உத்தியோகத்தர்கள் 2017 செப்தெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | வெளித்தரப்பினர்களால் காணிகளைச் சுவீகரித்தல், வாகனங்களின் பராமரிப்பு மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள், தேயிலை தொழிற்சாலைகளைப் பராமரித்தல் என்பன பலவீனமான மட்டத்தில் காணப்படல். |
| (ஆ) | பாதீட்டு கட்டுப்பாடு | பாதீட்டின் மூலம் இலக்கு தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அவற்றை நிறைவேற்றும் முறைமைகளும் மேற்பார்வை செய்யும் நடைமுறைகளும் பலவீனமான நிலையில் காணப்பட்டமை. |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்டகால கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கும் அறவீடு செய்வதற்குமான நடைமுறை பலவீனமான நிலையில் காணப்பட்டமை. |
| (ஈ) | ஆளணி நிர்வாகம் | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்குப் புறம்பாக ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருத்தல் |